986 நவம்பர் 24]

(எ) எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 67/1986)** ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப் பெறவேண்டும். ''

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு எதிர்பாராத நிதி செலவுக்காக வேண்டி 50 கோடி ரூபாயை இதுவரை ஒதுக்கி யிருந்தார்கள். இந்த ஆண்டு அந்தச் சட்டத்தைத் திருத்தி 100 கோடி ரூபாயாக வேண்டுமென்று கேட்கப்பட்டு இருக்கிறது. 50 கோடி ரூபாய் அளவிலேயே இந்த அரசு எதிர்பாராத செல களுக்கு எடுத்துக்கொண்டால் போதும் என்றும், அது மிக்க நலமாக இருக்கும் என்றும் நான் கருதுகிறேன். எதிர்பாராச் செலவு என்பது புயல், வெள்ளம் அல்லது எதிர்பாராத, மிக அத்தியாவசியமான செலவுகளுக்கு மட்டும் அதிலிருந்து இந்த அரசு செலவழித்தால் போதும் என்று நினைக்கிறேன். உங்களு டைய விளக்கக் குறிப்பிலே செல்லியிருப்பது, நீங்கள் சென்ற சட்டமன்றக் கூட்டம் மே மாதம் வரை நடைபெற்ற போது இருந்த செலவுகளாக இருக்கின்றன. அந்தச் செலவு களையெல்லாம் அப்பொழுதே நிதிநிலை அறிக்கையிலேயே சேர்த்து நீங்கள் அனுமதி வாங்கியிருக்கலாம். அதைத் தவிர அரசுக்கு இந்த 50 கோடி ரூபாயே எதிர்பாராச் செலவுக்குப் போதும் என்பது எங்களுடைய கருத்து. இப்பொழுது நீங்கள் சொல்லுகின்ற செலவெல்லாம், பல வகைகளிலே பல துறை களிலே ஏறத்தாழ துணை நிதிநிலையிலே 41 கோடி ரூபாய் செலவு என்று கணக்கு சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல, வறட்சியோ, பெரும் புயலோ எதுவுமே இப்பொழுது வரவில்லை அதற்குரிய செலவுகளை நீங்கள் காண்பித்திருப்பதாக அந்தக் கணக்கிலே இல்லை. வேறு பல செலவுகளுக்குக் கணக்குகளைக் காட்டி, எதிர்பாராச் செலவுக்கு 100 கோடி ரூபாய் வேண்டு மென்று கேட்பது சரியல்ல என்று கருதுகிறேன்.

அதேபோல், ஏற்கனவே இருந்த பல எதிர்பாராச் செலவு என்பது 50 கோடி ரூபாயே இருக்கலாம் என்று சொல்லி, ஜனதாக் கட்சியின் சார்பாக, வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**17—11—1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் ளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவு என்ற வகையில் எப்பொழுதுமே சட்டப்படி ஒப்புக்கொள்ளப் பட்டது 50 கோடி ரூபாய். அவ்வப்பொழுது ஏற்படுகின்ற கூடுதலான செலவுகள் ஏற்படுகின்ற பொழுது அவையின் முன் வைக்கப்பட்டு அவையினுடைய ஒப்புதல் பெறப்பட்டு ஒரு குறிப் பிட்ட காலத்திற்கு அதனுடைய தொகையை உயர்த்துவதும், பிறகு அதனுடைய பழையபடி அந்தத் தொகை 50 கோடிக்கு வருவதுமாகவும் ஒரு வழக்கம் இருந்து வருகிறது. இப்பொழுது கூட 1987 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி வரையிலும், இந்த 50 கோடியை 100 கோடியாக உயர்த்தித்தந்தால்தான் சில எதிர்பாரா செலவினங்களை ஈடுகட்ட முடியும் என்று காரணம் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு மிக முக்கியமான காரணம் சாதாரண புதிய பணி என்ற முறையில் சிலபல செலவுகளை நாம் தாங்க வேண்டியிருக்கிறது. நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் — கோவாப்டெக்ஸ் போன்ற நிறுவனங்கள் ஆகிய வற்றிற்குத் தள்ளுபடி அளிப்பதற்கு ஊக்க ஆதரவுத்தொகையை வழங்க வேண்டியிருக்கிறது. இந்த வகையிலே டெல்லியிலிருந்து நமக்கு ஒரு ரிபேட்டாக வர வேண்டும். ஆகவே, அந்த வகைக்கு வராததன் காரணமாக பிரைமரி கூட்டுறவுச் சங்கங்களிலே அந்த ரிபேட் தொகை கொடுக்கப்படாமலேயே இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக இருப்பதனால் பிரைமரி கூட்டுறவுச் சங்கங் கள் சரியாக இயங்காமல் தவித்துக் கொண்டு இருக்கின்றன.

ஆகவே, நாம் அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு, டெல்லியிலே இருந்து பணம் வருகின்றபொழுது நாம் அதை ரீஇம்பர்ஸ் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதன் காரணத் தால், உடனடியாக அவர்கள் நம்மிடம், ரூ. 30 கோடிக்கு மேல் தர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது, பிரைமரி கூட்டுறவுச் சங்கங்கள், மற்றவை எல்லாம் சேர்த்து. இப்பொழுது, ஓரள வுக்கு, ரூ. 10, 12 கோடி அளவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக் கிறது.

அதுமட்டுமல்லாமல், இப்பொழுது, வட்டி, கூடுதல் வட்டி, அபராத வட்டி, ஆகியவற்றை எதிர்பாராத வகையில் தள்ளுபடி செய்வது என்கின்ற நிலை ஏற்படுகின்றபொழுது ரூ. 125 கோடிக் குத் தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏற் கனவே, கட்டிய வட்டியைத் திருப்பித் தருகின்ற வகையில் ரூ. 20 கோடி, ஆக, ரூ. 145 கோடிக்கு வழி செய்ய வேண்டும். வழி செய்ய வேண்டுமென்றால், அந்த வங்கிகள் எல்லாம் இயங்க வேண்டும் ; அந்த வங்கிகள் நடை போட வேண்டும் ; அங்கே ஏற்படும் எஸ்டாபிளிஷ்மென்ட் சார்ஜஸ்ஸை மீட் அவுட் செய்ய வேண்டும். இதற்கெல்லாம் அரசு அந்த வங்கிகளைக் காப் பாற்ற வேண்டும் ; இல்லாவிட்டால் அந்த வங்கிகள் எல்லாம் அவதியுற வேண்டிய அவசியம் ஏற்படும். இப்படிப்பட்ட செலவுகள் இருப்பதன் காரணத்தால்தான் இந்த ரூ. 50 கோடியை வைத்து ஈடு செய்ய இயலாது. ரூ. 100 கோடி

1986 நவம்பர் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று இருந்தால்தான் அந்தப் பணிகள் நடைபெற இயலும். இல்லாவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் சொல்வது போல், ரூ. 50 கோடியோடு நிறுத்திவிட்டால், சில பல பணிகளை அடுத்த ஜனவரி மாதம் அல்லது, பிப்ரவரி மாதம் வரை ஒத்திப்போட வேண்டிய நிலைமை வரும். அப்படி ஒத்தி வைப்பதன் காரணத்தால், வீண் காலதாமதம் ஏற்படும். என்னைப்பொறுத்த வரையில், ரூ. 50 கோடி அல்லது ரூ. 25 கோடியில் நிறுத்தப் பெற வேண்டும் என்றால், இந்தப் பணிகள் எல்லாம் நடைபெறாமல் போகும். அந்தச் செலவெல்லாம் செய்து தீர வேண்டுமென்பது அல்ல ; ஆனால், எதிர்பாராமல் இப்படிச் செய்வதை நாம் ஈடுகட்ட வேண்டிவரும். அப்படி எதிர்பாராமல் செலவு செய்யும்பொழுது , இப் பொழுது முதல் துணை மானியக் கோரிக்கைகள் வந்ததுபோன்று, பிப்ரவரியிலே அடுத்த பட்ஜெட் போடுவதற்கு முன்னால், இரண்டாவது துணை மானியக் கோரிக்கையும் இந்த அவையின்முன் வைத்து, எது, எதற்கு செலவழித்தோம் என்று எடுத்துச் சொல்லி, எல்லோருடைய அனுமதியைப் பெற்றுத்தான் நிறைவேற்ற வேண்டி வரும். ஆகவே, தேவை, அவசியம், வேறு வழியில்லை, உடனடியாக காரியங்கள் நிறைவேற வேண்டும், பணிகள் நகர வேண்டு மென்பதற்காகத்தான் இது கேட்கப் படுகிறது. அதுவும் நீடித்த காலத்திற்கு அல்ல. ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வரைதான் இந்த ரூ. 100 கோடி, அதற்குப் பிறகு மறுபடியும் இது ரூ. 50 கோடியாக இறங்கி வந்து விட வேண்டும். ஆகவே, இதை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 67/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 67/1986) நிறைவேற்றப்பெற வேண்டும் .''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஏ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனிஅலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 79/1986) ** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 79/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11-00)

(ஐ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 69/1986) *** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**21—11—1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

***18—11—1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.